# FIRST INFORMATION REPORT
## முதல் தகவல் அறிக்கை
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி தொ.பிரிவு 154 இன் கீழ்)

**TAMIL NADU POLICE**
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8051898

1. District : மாவட்டம் சென்னை PS: V&AC காவல்நிலையம் சென்னை நகரபிரிவு-II Year: ஆண்டு 2021 FIR No.: மு.த.அ. எண் 09/AC/2021/CC-II Date: நாள் 28.12.2021 09.00 hrs
2. (i) Act சட்டம்: Sections பிரிவுகள்:
   (ii) Act சட்டம்: Prevention of Corruption (Amendment) Act 2018 Sections பிரிவுகள்: 7 and 12
   (iii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :
3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் Date from : நாள் முதல் Date to : நாள் வரை 22.12.2021 மாலை
   Time Period : நேர அளவு Time from : நேரம் முதல் Time to : நேரம் வரை சுமார் 17.30 மணி
   (b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 27.12.2021 Time : நேரம் 17.00 hrs
   (c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் : 27.12.2021 Time : நேரம் 17.00 hrs
4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக கணினியில் தட்டச்சு செய்து அளித்த எழுத்துமூலம் புகார்.
5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் : சுமார் 15 KM வடமேற்கு
   Beat Number : முறைக் காவல் எண் (b) Address : முகவரி : வட்டாட்சியர் அலுவலகம், அயனாவரம்
   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் District : மாவட்டம் —
6. Complainant /Informant (a) Name : குற்றமுறையிட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் திரு. புஷ்பதாஸ் (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் அருள்தாஸ்
   (c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 51 வயது (d) Nationality : நாட்டினம் இந்தியன் (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
   Date of Issue : வழங்கப்பட்ட நாள் Place of Issue : வழங்கப்பட்ட இடம்
   (f) Occupation : தொழில் சொந்த AK. Builders (g) Address : முகவரி 4/403, மேகப்பேர் தெரு, ஜானாம்பேட், சென்னை-37.
7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
   தெரிந்த / ஐயப்பாட்டிற்குரிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
   (1) திருமதி. ரேவதி, வருவாய் ஆய்வாளர், வட்டாட்சியர் அலுவலகம், அயனாவரம், சென்னை.
   (2) திரு. சின்னதுரை, வட்டாட்சியர், வட்டாட்சியர் அலுவலகம், அயனாவரம், சென்னை.
8. Reasons for delay in reporting by the complainant / Informant: குற்றமுறையிட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம் —

GCP-240-34(Type-2) 90,000 Cps.-21.3.15(RCL-12)

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு —

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் —

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

தனித்தாள் இணைக்கப்பட்டுள்ளது.

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ...................... Rank ...................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS..............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் M.விஸ்வக்குமார் பதவி காவல் ஆய்வாளர் நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ............................................ காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

28.12.2021

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்
28.12.2021

Name: பெயர் M. VISVAKHUMAR
Rank: நிலை INSPECTOR OF POLICE No. எண் .........
VG AC, Chennai city II,
Chennai-16.

....Continuation to column no.12 of FIR in Chennai, V&AC, Chennai City-II Cr.No.09/AC/2021/CC-II.

பணிந்து சமா்ப்பிக்கப்படுகிறது : சென்னை, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை, சென்னை நகரப்பிரிவு -2-ன் காவல் ஆய்வாளர் M.விஸ்வகுமார ஆகிய நான் 27.12.2021-ந்தேதி மாலை 17.00 மணிக்கு அலுவகத்தில் பணியிலிருந்தபோது நொளம்பூரை சேர்ந்த திரு.அ.புஷ்பதாஸ் என்பவர் அலுவலகம் வந்து கணினி மூலம் தட்டச்சு செய்து கொண்டு வந்து அளித்த எழுத்துமூலமான புகாரின் பேரில் மறைமுக விசாரணை செய்து இன்று 28.12.2021-ந் தேதி காலை 09.00 மணிக்கு வழக்கு பதிவு செய்தேன். அவர் அளித்த எழுத்து மூலமான புகாரின் விவரம் பின்வருமாறு:- அனுப்புநா் திரு.அ.புஷ்பதாஸ், த/பெ.P.அருகதாஸ், எண்.4/403, முகப்போ் மேற்கு, நொளம்பூா், சென்னை-37. பெறுநா். காவல் ஆய்வாளா் அவா்கள், லஞ்ச ஒழிப்புத் துறை, ஆலந்தூா், சென்னை-16. ஐயா, நான் A.R. Builders என்ற தனியாா் நிறுவனத்தில் Clerk ஆக கடந்த 15 வருடங்களாக பணிபுரிந்து வருகிறேன். எனது சொந்த ஊா் திருவண்ணாமலை மாவட்டம், வந்தவாசி வட்டம், கூனம்பாடி கிராமமாகும். கடந்த 2012 ம் வருடம் எனது தந்தையாா் திரு.அருகதாஸ் எங்கள் கிராமத்தில் திரு.யசோதரன் என்பவருக்கு சொந்தமான இடத்தை அவரது ஒரே மகளான அழகுமணி என்பவரிடமிருந்து ரூ.5,000/-த்துக்கு வாங்கினாா். திருமதி அழகுமணி எனது தாய்மாமா திரு.கீா்த்தியின் மனைவி ஆவாா். திருமதி அழகுமணி அயனாவரம் ஏகாங்கிபுரத்தில் வசித்து வருகிறாா். கடந்த 2019ம் வருடம் எனது தந்தை இறந்துவிட்டாா். எங்கள் குடும்ப சொத்துகளை எனது குடும்ப உறுப்பினா்கள் பாகபிரிவினை செய்து கொண்டோம். அதில் பாகபிரிவினையின் படி எனக்கு கூனம்பாடி கிராமத்தில் உள்ள மேலே சொன்ன இடம் எனக்கு கிடைத்தது. நான் மேற்படி இடத்தை திருவண்ணாமலை மாவட்டம், தெள்ளாறு சாா்பதிவாளா் அலுவலகத்தில் பதிவு செய்ய சென்றபோது மேற்படி இடத்தை பதிவு செய்வதற்கு இடத்தை விற்றவரிடமிருந்து வாரிசு சான்றிதழ் வாங்கி வரவேண்டும் என்று கூறிவிட்டாா்கள். மேற்படி இடத்தை விற்ற திருமதி அழகுமணி அவா்களுக்கு வாரிசு சான்றிதழ் பெற நான் திருமதி அழகுமணியுடன் ஈ சேவை மையம் மூலம் கடந்த 08.04.2021 ம் தேதியன்று விண்ணப்பித்தோம். வந்தவாசி வட்டாட்சியா் அலுவலகத்திலிருந்து NOC பெற்றுதரவேண்டும் என்று கூறி அந்த விண்ணப்பத்தினை நிராகரித்து விட்டனா். ஆதலால் நான் வந்தவாசி வட்டாட்சியா் அலுவலகத்திலிருந்து திருமதி அழகுமணி அவா்களுக்கு தடையில்லா சான்றிதழ் பெற்று கடந்த 07.10.2021ம் தேதி மீண்டும் ஈ சேவை மூலம் விண்ணப்பித்தோம். திருமதி அழகுமணி அவா்களுக்கு வயதானதால் வாரிசு சான்றிதழ் பெற தேவையான அனைத்து விஷயங்களையும் நான் தான் பாா்த்துக்கொள்கிறேன். எங்களுடைய

விண்ணப்பத்தினை அயனாவரம் வருவாய் ஆய்வாளர் நிராகரித்ததாக 13.11.2021ம் தேதி ஆன்லைனில் தெரிந்து கொண்டேன். அதனால் அயனாவரம் வருவாய் ஆய்வாளர் திருமதி பொன்னி அவர்களை நேரில் சென்று பார்த்தேன். அதற்கு அவர் வாரிசுதாரரின் பெற்றோர் இறந்து பல வருடங்கள் ஆகிவிட்டதால் என்னுடைய மனுவினை நிராகரித்துவிட்டதாக கூறினார். மேலும் அவர் என்னை தாசில்தாரை பார்க்கும்படி கூறினார். நான் தாசில்தாரை சென்று சந்தித்து மேற்படி விவரங்களை கூறினேன். அதற்கு அவர் வருவாய் ஆய்வாளரையே மீண்டும் சென்று பார்க்கும் படியும் அவர் என்ன சொல்கிறாரோ அதன்படி செய்யுங்கள் என்றும் கூறி அனுப்பிவிட்டார். அதனால், நான் மீண்டும் வருவாய் ஆய்வாளர் அவர்களை கடந்த 22.12.2021ம் தேதியன்று மாலை சுமார் 05.30மணிக்கு அயனாவரம் வட்டாட்சியர் அலுவலகத்திற்கு சென்று பார்த்தேன். அப்போது அவர் யசோதரன் அவர்கள் கடந்த 1996ம் வருடம் இறந்து 25 வருடங்களாகிறது, அதனால் வருடத்திற்கு ரூ.1000 வீதம் ரூ.25000/-தை அவருக்கு தனியாக கொடுக்கவேண்டும் என்றும், இந்த பணத்தை கொடுத்தால்தான் மேல் நடவடிக்கை எடுப்பேன் என்று கூறினார். அதற்கு நான் என்னால் அவ்வளவு பணம் கொடுக்க முடியாது என்று கூறினேன். அதற்கு அவர் இந்த பணம் எனக்கு மட்டுமல்ல, எனக்கு மேலே உள்ளவர்களுக்கும் சேர்த்துதான் கேட்கிறேன் என்று கூறினார். அப்போது எங்களது மனு இரண்டாவது முறையாக நிராகரிக்கப்பட்டதை கூறினேன். அதற்கு அவர் மீண்டும் நீங்கள் ஈ சேவை மூலம் பதிவு செய்யுமாறும் பதிவு செய்த பின்பு வந்து என்னை பார்த்து பணத்தை கொடுத்த பின்தான் வேலை நடக்கும் என்று கூறினார். என்னால் அவ்வளவு பணம் கொடுக்க முடியாது என்று கூறினேன். அதற்கு அவர் ஈ.சேவை மூலம் விண்ணப்பித்து விட்டு வந்து பார்க்கும்போது ரூ.10000/-தையும் வேலை முடிந்தவுடன் மீதி பணம் 15000 த்தையும் தரும்படி கூறினார். மேலும் வேண்டுமானால் தாசில்தாரை போய் பாருங்கள் என்று சொல்லி என்னை அனுப்பிவிட்டார். இன்று 27.12.2021 காலை அயனாவரம் வட்டாட்சியர் அலுவலகத்திற்கு நானும் திருமதி அழகுமணியும் சென்று ஈ சேவை மூலம் மீண்டும் வாரிசு சான்றிதழ் வேண்டி விண்ணப்பம் செய்தோம். பின்னர் நான் சுமார் 12.30 மணியளவில் அயனாவரம் வட்டாட்சியர் திரு.சின்னதுரை அவரிடம் சென்று நாங்கள் வாரிசு சான்றிதழ் கோரி மனு செய்ததையும் அதற்கு வருவாய் ஆய்வாளர் திருமதி பொன்னி வாரிசு சான்றிதழ் தயார் செய்ய வருடத்திற்கு ரூ.1000 வீதம் ரூ25000/- லஞ்சம் கேட்டதையும், முதலில் ரூ10000/-தை தரவேண்டும் என்று வற்புறுத்தியதையும் தெரிவித்தேன். அதற்கு அவர் 10 வருடங்களுக்கு மேலே போனால் வாரிசு சான்றிதழ் கொடுக்க முடியாது, 25 வருடம் ஆகியுள்ளது, அதனால் அவரிடமே சென்று பேசிக்கொள்ளுங்கள் என்று அனுப்பிவிட்டார். எனவே, எங்களுக்கு வாரிசு சான்றிதழ் கொடுப்பதற்காக முதலில் ரூ.10000/-தை லஞ்சமாக

கேட்ட அயனாவரம் வட்டாட்சியர் அலுவலகம். வருவாய் ஆய்வாளர் திருமதி பொன்னி அவர்கள் மீதும், வருவாய் ஆய்வாளருக்கு உடந்தையாக உள்ள அயனாவரம் வட்டாட்சியர் திரு.சின்னதுரை மீதும் நடவடிக்கை எடுக்குமாறு கேட்டு கொள்கிறேன். இப்படிக்கு அ.புஷ்பதாஸ், 27/12/2021. Sir, Received a complaint on 27.12.2021 at 17.00 hrs. Sd (XXX) M.Visvakhumar, Inspector of Police, CC –II, V&AC, Chennai -16. Sir, after due verification, a case was registered in V &AC, Chennai City –II, Cr.No.09/AC/2021/CC-II, U/s. 7 and 12 of Prevention of Corruption (Amendment) Act 2018 on 28.12.2021 at 09.00 hrs. Sd (XXX) M.Visvakhumar, Inspector of Police, CC –II, V&AC, Chennai -16.

The original FIR along with complaint submitted before the Hon'ble Special Judge for the cases under prevention of corruption Act, Chennai and other copies submitted to officer concerned.